

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களிடம் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்பட்ட தொகுதி1 தேர்வு மூலம் துணை ஆட்சியர் பணியிடத்திற்கு புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்டு 25.08.2025 அன்று பணி நியமன ஆணைகளை பெற்ற 15 துணை ஆட்சியர்கள் நேற்று வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன் தலைமைச் செயலகத்தில் நேரில் சந்தித்து வாழ்த்து பெற்றனர். இந்நிகழ்வின்போது அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்கள் திருமதி பெ.அமுதா, முனைவர் மு.சாய்குமார், கூடுதல் ஆணையர் (வருவாய் நிருவாகம்) முனைவர் ச. நடராஜன், வருவாய் துறை உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.



சென்னை, கிண்டி சிட்கோ கூட்டமைப்பு அலுவலக வளாகத்தில் நேற்று அமைச்சர் தா.மோ. அன்பரசன் தலைமையில் மாவட்ட தொழில் மையங்களின் பொது மேலாளர்களுடன் துறை சார்ந்த பணிகள் குறித்து கலந்தாய்வு கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல் ஆனந்த், , தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி கழக முதன்மை செயலாளர் ஆ.கார்த்திக், தொழில் ஆணையர் மற்றும் தொழில் வணிக இயக்குநர் இல.நிர்மல்ராஜ், மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# வில்லிவாக்கம் சட்டமன்றத் தொகுதியில் ‘உங்களுடன் ஸ்டாலின்’ திட்ட முகாம்!

## அமைச்சர் பி.கே.சேகர் பாபு மனுக்களுக்கு தீர்வு ஆவணங்கள் வழங்கினார்!

*சென்னை, ஆக.27-*

மக்களிடம் செல்; அவர்களோடு வாழ்; அவர்களை நேசி என்ற பேரறிஞர் அண்ணாவின் கொள்கைப் பாதையில் நமது தமிழ்நாடு அரசு மக்களின் மீது கொண்டிருக்கும் அக்கறைக்கு மற்றுமொரு எடுத்துக்காட்டாக “உங்களுடன் ஸ்டாலின்” என்ற புதிய திட்டத்தினை முதலமைச்சர் அவர்கள் அறிவித்ததால் தமிழ்நாட்டில் உள்ள கடைகோடி மக்களுக்கும்,

அவர்கள் அன்றாடம் அணுகும் அரசுத் துறைகளின் சேவைகள் / திட்டங்களை குறிப்பாக சாதி சான்று பெற, பட்டா மாற்றம் செய்ய, பென்சன் வாங்க, மகளிர் உரிமைத் தொகை திட்டத்தில் தகுதி வாய்ந்த விடுபட்ட மகளிர் பயன் பெற, மருத்துவ காப்பீட்டு அட்டை பெற, ஆதார் அட்டையில் திருத்தங்கள் செய்ய, ரேசன் அட்டையில் முகவரி திருத்தம் செய்ய” போன்ற பல கோரிக்கைகளுக்கு அரசு அலுவலகங்களுக்குச் செல்ல வேண்டிய அவசியமின்றி அலுவலர்கள் நேரடியாக உங்கள் இருப்பிடங்களுக்கு அருகிலேயே வந்து தீர்வுகளை வழங்கும் உன்னத திட்டமான உங்களுடன் ஸ்டாலின் திட்டம் இன்று வில்லிவாக்கம் சட்டமன்ற தொகுதியில் மண்டலம் 8 வார்டு-96 சென்னை அயனாவரம் பி.வி கோயில் தெரு சந்திப்பில் நேற்று (26.8.2025) செவ்வாய்க்கிழமை நடைபெற்ற



இதில் இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சரும், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே. சேகர்பாபு பல்வேறு கோரிக்கைகளுக்காக முகாமில் பங்கேற்ற பயனாளிகளுக்கு குறிப்பாக மின் இணைப்புகளுக்கான நுகர்வோர் பெயர் மாற்றம்.1 மனுக்கள் பெறப்பட்டு அந்த மனுக்களுக்கும் தீர்வு கண்டும் CMCHIS முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டுத் திட்டம் 81 மனுக்கள் பெறப்பட்டு அந்த மனுக்களுக்கும் தீர்வு கண்டும் ஆதார் இணைய சேவைகள் மனு 30 பெறப்பட்டு மனுக்களுக்கும் தீர்வு கண்டும் பிறப்பு மற்றும் இறப்பு சான்றிதழ்களில் பெயரை சேர்க்க மற்றும் திருத்தம் செய்ய கோரி - 15 மனுக்கள் பெறப்பட்டு அந்த மனுக்களுக்கும் தீர்வு கண்டும் சொத்து வரியை மதிப்பிடுவதற்கான விண்ணப்பங்கள் மற்றும் பெயர் மாற்றம் செய்ய கோரி 6 மனுக்கள் பெறப்பட்டு மனுக்களுக்கும் தீர்வு கண்டும் பட்டா நில அளவை மற்றும் பெயர் மாற்றுதல் 5 பெறப்பட்டு மனுக்களுக்கும் தீர்வு கண்டும்

சமூகப் பாதுகாப்புத் திட்டங்கள் (SSS) - ஓய்வூதியத் திட்டங்கள் / முதல்வர் மருத்துவ காப்பீட்டுத் திட்டம் - 25 மனுக்கள் பெறப்பட்டு

அந்த... மனுக்களுக்கும் தீர்வு கண்டும் ஆதரவற்ற குழந்தைகளுக்கான உணவுகள் நிதியுதவி திட்டம் - 2 மனுக்கள் பெறப்பட்டு தீர்வு கண்டும் மாற்றுத்திறனாளி களுக்கான தேசிய அடையாள அட்டை/ மாற்றுத்திறனாளிகளுக்கான தனிப்பட்ட அடையாள அட்டை -2 விண்ணப்பம் பெறப்பட்டு தீர்வு கண்டும்

கலைஞர் மகளிர் உரிமை தொகை -157 மனுக்கள் பெறப்பட்டு தீர்வு கண்டும்

இதர மனுக்கள் -154 என மொத்தமாக 583 மனுக்கள் பெறப்பட்டு அதில் 562 மனுக்களுக்கு தீர்வு காணப்பட்டு அதற்குரிய ஆவணங்களை உரிய பயனாளிகளிடம் வழங்கினார்.

மேலும் இந்நிகழ்வில் மண்டல குழு தலைவர் கூ.பீ. ஜெயின், பகுதிக் கழகச் செயலாளர் வே.வாசு, எஸ்.தனலட்சுமி எம்.சி, வட்ட கழக செயலாளர்கள் எ.வேதா, காஞ்சி செ.துரை, எ.தேவராஜ், சீ.விக்னேஷ் மற்றும் 96 வட்டக் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### “ஓரணியில் தமிழ்நாடு” உறுப்பினர் சேர்க்கை வெற்றிகரமாக முடித்ததைத் தொடர்ந்து

# சைதை கிழக்குப் பகுதியில் பாக முகவர்கள் - நிர்வாகிகளுக்கு பரிசு!

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் வழங்கினார் – இரா.துரைராஜ் தலைமையில்!

*சென்னை, ஆக. 27 -*

தமிழ்நாட்டின் மண் மொழி மானம் காக்க கழகத் தலைவர் தமிழக முதல்வர் அவர்கள் “ஓரணியில் தமிழ்நாடு” மக்கள் சந்திப்பு மற்றும் உறுப்பினர் சேர்க்கை முன்னெடுப்பைத் தொடங்கி வைத்து வெற்றிகரமாக முடித்ததை தொடர்ந்து. 25-08-2025 அன்று, சென்னை தெற்கு மாவட்டம் சைதை கிழக்கு பகுதியில் சிறப்பான முறையில் உறுப்பினர் சேர்க்கையை மேற்கொண்ட கழக நிர்வாகிகளை கௌரவிக்கும் விதமாக, சைதை கிழக்கு பகுதி செயலாளர் இரா. துரைராஜ் எம்.சி தலைமையில் பரிசுகள் வழங்கி அசைவ விருந்து அளிக்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில், முதல் ஐந்து இடத்தை பிடித்த வட்ட கழக செயலாளர்களுக்கு, முதல் பரிசாக ரொக்கம் ரூ. 50000 மற்றும் மிக்ஸி,

இரண்டாவது பரிசாக, ரொக்கம் ரூ. 45000 மற்றும் மிக்ஸி, மூன்றாவது பரிசாக ரொக்கம் ரூ. 40000 மற்றும் மிக்ஸி, நான்காம் பரிசாக ரொக்கம் ரூ. 35000 மற்றும் மிக்ஸி, மற்றும் இதர வட்ட கழக கழக செயலாளர்களுக்கு ரொக்கம் ரூ.25000 மற்றும் மிக்ஸியும், சைதை கிழக்கு பகுதியின் 141 பாகங்களுக்கும் ஒரு பாகத்திற்கு ரொக்கம் ரூ.5000 மற்றும் ஹாட் பாக்ஸ் விதம் 141 பாகங்களில் உள்ள பாக முகவர்கள் மற்றும் பாக டிஜிட்டல் முகவர்கள் உள்ளிட்ட கழக நிர்வாகி களுக்கும், தகவல் தொழில் நுட்ப அணி நிர்வாகிகள் 16 பேருக்கு ரூ. 2500 மற்றும் ஹாட் பாக்ஸ்களையும் , மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன் கலந்துகொண்டு பரிசுகளை வழங்கினார்.

நிகழ்ச்சியில் சென்னை மாநகராட்சி துணை மேயர் மு. மகேஷ்குமார் சைதை சட்டமன்ற தொகுதி மேலிட பார்வையாளர் கே.எஸ். ரவிச்சந்திரன், பொதுக்குழு உறுப்பினர் மின்னல் கந்தப்பன், உள்ளிட்ட பகுதி நிர்வாகிகள், வட்ட கழக செயலாளர்கள் அனைத்து அணிகளின் மாவட்ட, பகுதி, மற்றும் வட்ட நிர்வாகிகளும் கலந்து கொண்டனர்.

### கழிவு நீர் உந்து குழாய் இணைக்கும் பணி!

# அம்பத்தூர் பகுதிகளில் 29.8.2025 அன்று கழிவுநீர் நிலையங்கள் செயல்படாது!

## சென்னை குடிநீர் வாரியம் தகவல்!

*சென்னை, ஆக.27-*

மண்டலம்-7 (அம்பத்தூர்) பாடி மேம்பாலத்திற்கு கீழ், பிராதன கழிவுநீர் உந்து குழாய் இணைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளதால், 29.08.2025 அன்று காலை 11 மணி முதல் 30.08.2025 மாலை 4 மணி வரை (29 மணி நேரம்) அம்பத்தூர் மண்டலத்திற்குட்பட்ட பகுதிகளில் கழிவுநீர் உந்து நிலையங்கள் செயல்படாது என்று சென்னை குடிநீர் வாரியம் தகவல் தெரிவித்துள்ளது.

மண்டலம் - 7 (அம்பத்தூர்) பாடி மேம்பாலத்திற்கு கீழ், பிராதன கழிவுநீர் உந்து குழாய் இணைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளதால், 29.08.2025 அன்று காலை 11 மணி முதல் 30.08.2025 மாலை 4 மணி வரை (29 மணி நேரம்) அம்பத்தூர் மண்டலத்திற்குட்பட்ட கீழ்கண்ட கழிவுநீர் உந்து நிலையங்கள் தற்காலிகமாக செயல்படாது.

எனவே, அம்பத்தூர் மண்டலத்திற்குட்பட்ட இடங்களில் கழிவுநீர் தொடர்பான புகார்களுக்கு கீழ்க்காணும் பகுதி அலுவலர்களை தொடர்பு கொள்ளவும்.

வ. எண் மண்டலம் பகுதிப் பொறியாளர் / துணை பகுதிப் பொறியாளர் கைபேசி எண்கள் கழிவுநீர் உந்து நிலையங்கள் 1. மண்டலம் 7 (அம்பத்தூர்) 8144930907 8144930257 கொரட்டூர் தொடர் கழிவுநீர் உந்து நிலையம், லெனின் நகர் கழிவுநீர் உந்து நிலையம், சங்கம் கழிவுநீர் உந்து நிலையம், அய்யப்பாக்கம் கழிவுநீர் உந்து நிலையம், வி.ஓ.சி. நகர் கழிவுநீர் உந்து நிலையம், நேரு நகர் கழிவுநீர் உந்து நிலையம், தென்றல் நகர் கழிவுநீர் உந்து நிலையம், கள்ளிக்குப்பம் கழிவுநீர் உந்து நிலையம், கருப்பன் குளம் கழிவுநீர் உந்து நிலையம், கருக்கு கழிவுநீர் உந்து நிலையம், பள்ளம் கழிவுநீர் உந்து நிலையம், சிட்கோ கழிவுநீர் உந்து நிலையம், கச்சனகுப்பம் கழிவுநீர் உந்து நிலையம், கிழக்கு அவென்யூ கழிவுநீர் உந்து நிலையம், இளங்கோ நகர் கழிவுநீர் உந்து நிலையம்.

### சட்ட மசோதாக்களுக்கான கால நிர்ணயம்

# தமிழ்நாடு அரசின் வாதத்துக்கு பதில் என்ன?

## ஒன்றிய அரசுக்கு உச்சநீதிமன்றம் சரமாரி கேள்வி!

*புதுடெல்லி, ஆக.27-*

சட்ட மசோதாக்களுக்கான கால நிர்ணயம் தொடர்பான வழக்கில் தமிழ்நாடு அரசின் வாதத்துக்கு பதில் என்ன என்று ஒன்றிய அரசுக்கு உச்சநீதிமன்றம் கேள்வி எழுப்பியுள்ளது.



சட்ட மசோதாக்களுக்கான கால நிர்ணயம் மீது குடியரசுத் தலைவர் கேள்வி எழுப்பிய வழக்கில் நேற்று மீண்டும் விசாரணை நடைபெற்றது. நேற்றுடன் ஒன்றிய அரசு தரப்பு வாதங்களை முடிக்க வேண்டும் என்று உச்சநீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது. இந்நிலையில், நேற்றைய வழக்கு விசாரணையின்போது, ஒன்றிய அரசுக்கு உச்சநீதிமன்றம் அடுக்கடுக்கான கேள்விகளை எழுப்பியது.

இரண்டாவதாக ஒரு மசோதா நிறைவேற்றி அனுப்பினால் அதனை ஆளுநர் திருப்பி அனுப்ப முடியுமா? ஆளுநருக்கு வீட்டோ அதிகாரம் உள்ளதா? மாநில அரசு நிறைவேற்றிய மசோதாவை ஒன்றிய அரசு திருப்பி அனுப்ப இயலுமா? அதன் விளைவுகள் என்ன என்று நீதிமன்றம் கேள்வி எழுப்பியது. 2வது முறையாக நிறைவேற்றி அனுப்பும் மசோதாவை ஆளுநர் குடியரசுத் தலைவருக்கு அனுப்ப இயலாது. ஒப்புதல் அளிப்பதை தவிர வேறு வழி இல்லை என்ற தமிழ்நாடு அரசின் வாதத்துக்கு என்ன பதில்? என்றும் ஒன்றிய அரசுக்கு உச்சநீதிமன்றம் கேள்வி எழுப்பியது. போர் போன்ற அவசர நிலை காலங்களில் வேண்டுமானால் தேசிய ஒற்றுமை, ஒருமைப்பாடு என்ற அடிப்படையில் ஒன்றிய அரசு மாநில விவகாரங்களில் தலையிடும் அதிகாரம் உள்ளது.

ஆனால் சாதாரண நேரங்களில் எப்படி தலையிட முடியும்? என்று உச்சநீதிமன்றம் கேள்வி எழுப்பியது.

குடியரசு தலைவர் ஒன்றிய அமைச்சரவையின் ஆலோசனைபடி செயல்படுவது போல் மாநில அமைச்சரவையின் ஆலோசனைக்கு ஆளுநர் கட்டுப்பட்டவர் தானே? என்று உச்சநீதிமன்ற நீதிபதிகள் தெரிவித்தனர்.

ஆளுநர் மசோதாவை ஏன் நிறுத்தி வைத்துள்ளார் என்று நீதிமன்றம் கேள்வி கேட்கலாம் என்றும் நீதிபதிகள் தெரிவித்தனர்.

# திருவாரூர் மத்திய பல்கலைக் கழகத்தில் 10வது பட்டமளிப்பு விழா!

## குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு பங்கேற்கிறார்!

திருவாரூர், ஆக. 27 -

திருவாரூர் மாவட்டம் நீலக்குடியில் அமைந்துள்ள தமிழ்நாடு மத்திய மத்திய பல்கலைக்கழகத்தின் பத்தாவது பட்டமளிப்பு விழா 2025 செப்டம்பர் 3 ஆம் தேதி அன்று நடைபெற உள்ளது. பல்கலைக்கழகத்தின் மாண்பமை துணைவேந்தராக பேராசிரியர் மு.கிருஷ்ணன் சிறப்புடன் செயலாற்றி வருகிறார்.

பட்டமளிப்பு விழாவில் இந்திய குடியரசு தலைவர் மற்றும் தமிழ்நாடு மத்திய பல்கலைக்கழகத்தின் மேன்மையர் திருமதி திரௌபதி முர்மு அவர்கள் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு சிறப்பிக்க உள்ளார்.

மண்ணின் மைந்தர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களது சாதனைத்திட்டமான தமிழ்நாடு மத்திய பல்கலைக்கழகத்தின் பத்தாவது பட்டமளிப்பு விழாவில் இந்திய குடியரசு தலைவர் உரை நிகழ்த்தி மாணவர்களுக்கு ஊக்கம் அளிப்பார். மேலும் தங்க பதக்கம் பெறும் மாணவர்களுக்கு பதக்கங்களை வழங்குவார்.

இந்த ஆண்டு மொத்தம் 1,010 மாணவர்கள் பட்டம் பெறுகின்றனர். இதில் 568 பெண்கள், 442 ஆண்கள் ஆவர். இதில் 45 மாணவர்கள் (34 பெண்கள் 11 ஆண்கள்) தங்கப்பதக்கம் வென்றிருப்பது குறிப்பிடத்தக்கது. இந்த ஆண்டு 44 மாணவர்கள் முனைவர் பட்டம் பெறுகின்றனர். (இதில் 27 பெண்கள் மற்றும் 17 ஆண்கள்).

நேரில் பட்டம் பெறும் மாணவர்கள் மொத்தம் 771. இதில் 454 பெண்கள் மற்றும் 317 ஆண்கள் ஆகும்.

தமிழ்நாடு மத்தியப் பல்கலைக் கழகம், 2009 ஆம் ஆண்டு இந்திய நாடாளுமன்றத்தில் இயற்றப்பட்ட சட்டத்தின்படி தமிழ்நாட்டில் தி.மு.க. ஆட்சியின்போது திருவாரூர் மாவட்டத்தில் அமைக்கப்பட்டது.

தமிழ்நாடு மத்தியப் பல்கலைக் கழகம், 13 கல்வி புலன்களின் கீழ் 28 துறைகளைக்கொண்டு சிறந்து விளங்குகிறது. தேசிய தர மதிப்பீடு மற்றும் அங்கீகார கவுன்சிலின் (NAAC) ஆய்வில், ‘ஏ ப்ளஸ்’ (A+) தர அங்கீகாரத்தைப் பெற்றுள்ளது. தேசிய நிறுவனங்களுக்கான தரவரிசைப் பட்டியலின் படி (NIRF), கடந்த மூன்று ஆண்டு களாக நூறு சிறந்த பல்கலைக்கழகங்களின் பட்டியலில் இடம்பிடித்துள்ளது.

மேலும், மத்திய அரசின் உயிரித் தொழில்நுட்பத் துறை, அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறை, இந்திய சமூக அறிவியல் ஆராய்ச்சிக் கழகம், இந்திய மருத்துவ ஆராய்ச்சிக் கழகம் போன்ற பல்வேறு ஆய்வு நிறுவனங்களிடமிருந்து பல்வேறு மானியங்களைப் பெற்று,

பல ஆய்வுகளை மேற்கொண்டு வருகிறது. பல்கலைக்கழகத்தின் ஆய்வுக்கான குறியீடான, எச் இன்டெக்ஸ் அளவுகோலில், 2025 ஆம் ஆண்டில் ஆகஸ்ட் மாதம் வரை 84 ஆக உயர்ந்துள்ளது.

தமிழ்நாடு மத்தியப் பல்கலைக் கழகம் கற்பித்தல், ஆராய்ச்சி மற்றும் கண்டுபிடிப்புகளில் சிறந்து விளங்குவதோடு கல்வியின் பலன்களை, இந்தியாவின் கிராமப்புறங்களை சென்று சேர்க்கும் பொறுப்புள்ள குடிமக்களை உருவாக்கி வருகின்றது.



சென்னை வடகிழக்கு மாவட்டம் திருவொற்றியூர் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட மத்திய பகுதி சின்னசேக்காடு பேரூராட்சியின் 13வது வார்டு முன்னாள் உறுப்பினர் திருமதி சே.அமுலுவின் கணவரும் முன்னாள் சின்னசேக்காடு பேரூர் கழகத்தின் இளைஞர் அணி அமைப்பாளர் சே.தயாநிதியின் தகப்பனார் சேகர் முன்னாள் எம்.சி. அவர்கள் நேற்று அதிகாலை இயற்கை எய்தினார். அவரது உடலுக்கு சென்னை வடகிழக்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் திருவொற்றியூர் ஆர்.டி.மதன்குமார் மற்றும் மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் த.வேல்கணேசன், பகுதி இளைஞர் அணி அமைப்பாளர் மணலி எஸ்.ஸ்டாலின், பகுதி இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் செ.விக்னேஷ், எம்.டி.மோகன், நா.ப.புகழரசு, மு.வசந்ராஜ், ம.சுரேஷ், சகா.செந்தில், வி.மகேஷ், ரூபன், ஆட்டோ எல்.பாஸ்கர், அ. கார்த்திக், ராஜேஷ், அசரப், எஸ்.சதிஷ், அரவிந்த், நந்தகுமார், மற்றும் இளைஞர் அணி தோழர்கள் திரளாக கலந்து கொண்டு இறுதி அஞ்சலி செலுத்தினர்.

# ஒழுங்கு நடவடிக்கை ரத்து

## தலைமைக் கழக அறிவிப்பு

புதுக்கோட்டை தெற்கு மாவட்டம், ஆவுடையார்கோவில், பொன்பேத்தியைச் சேர்ந்த எஸ்.சுந்தரபாண்டியன் அவர்கள் தனது செயலுக்கு வருத்தம் தெரிவித்து மீண்டும் கழகப் பணியாற்றிட அனுமதி அளிக்குமாறு, **கழகத் தலைவர்** அவர்களிடம் வைத்த கோரிக்கையினை ஏற்று, அவர் மீதான ஒழுங்கு நடவடிக்கை ரத்து செய்யப்பட்டு, இன்று முதல் கழக உறுப்பினராகச் செயல்பட அனுமதிக்கப்பட்டுள்ளார்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 600018
நாள்- 26.08.2025

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்
தி.மு.க.



நகர்ப்புறங்களிலுள்ள அரசு உதவி பெறும் பள்ளிகளுக்கும், முதலமைச்சரின் காலை உணவு திட்டத்தினை முதலமைச்சர் அவர்கள் விரிவாக்கம் செய்து நேற்று தொடங்கி வைத்ததைத் தொடர்ந்து, மதுரவாயல் சட்டமன்றத் தொகுதி, வார்டு149, லாமெக் மேல் நிலைப் பள்ளியில் முதலமைச்சரின் காலை உணவு திட்டத்தை மதுரவாயல் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் காரம்பாக்கம் க.கணபதி, தொடங்கி வைத்தார். இந்நிகழ்வில் மண்டலக் குழுத் தலைவர் நொளம்பூர் வே.ராஜன், வே.மதியழகன், வட்ட கழக செயலாளர்கள் த.ரமேஷ், மாதவன், மாமன்ற உறுப்பினர் செல்வி ரமேஷ், மாவட்ட பிரதிநிதிகள் ஆர்.சிவலிங்கம், க.பிருந்தாவனம் மற்றும் கழக நிர்வாகிகள், அரசுத் துறை அதிகாரிகள் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.